# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 242/2018 | Date : 25.11.2025 | PW 2 |
|---|---|---|
| Name: பிர்லா | த/பெ.சின்னதுரை | |

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் 5வது வாதி என்றால் சரிதான். 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளிடம் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் விளம்புகை மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யதுள்ளார்கள். தாவா சொத்து குறித்து ஏற்கனவே அசல் வழக்கு எண். 39/2004 என்ற வழக்கில் ஏற்கனவே தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை விவரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அசல் வழக்கு எண். 39/2004 வழக்கு குறித்து எனக்கு இன்று வரை தெரியாதா என்றால் 2018ம் ஆண்டு தெரியும். மாதம் தேதி நினைவில்லை. 4 முதல் 7 பிரதிவாதிகள் என்ன தொந்தரவு செய்தார்கள் என்றால் நாங்கள் ஆதியில் இருந்து கிரயம் பெற்று அனுபவத்தில் இருநத சொத்துக்களை மேற்படி வழக்கு தீர்ப்பு குறித்து மிரட்டி வந்தார்கள். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு எங்களை மிரட்டினார்கள். பிரதிவாதிகள் எங்களை மிரட்டியது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அசல் வழக்கு எண். 39/2004 தாக்கல் செய்து அதில் இடைமனு எண். 55/2008யில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அந்த விவரங்கள் அனைத்தும வழக்கு தாக்கல் செய்த 2004ம் ஆண்டேஎங்களுக்கு தெரியும் என்றும், அப்போது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது பிரதிவாதிகள் தொந்தரவு செய்வதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு மூலமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளை பொறுத்து அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-பிர்லா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.